செ.வெ.எண்:04 நாள்:02.03.2021

# உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஊடக சான்று மற்றும் கண்காணிப்பு குழு சான்றொப்பம் பெற்ற பின்னரே தேர்தல் தொடர்பான விளம்பரங்களை ஒளிபரப்ப வேண்டும்.

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் இன்று (02.03.2021) கேபிள் டிவி ஆப்ரேட்டர்கள் தேர்தல் விளம்பரம் தொடர்பாக ஊடக சான்றளிப்பு பெறுதல் குறித்த கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது,**

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் 2021 நடைபெறுவதை முன்னிட்டு வேட்பாளர்களின் தேர்தல் செலவினத்தை கண்காணிக்க கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்கண்காணிப்பு குழுவால் வாக்குப்பதிவு நடைபெறும் வரை 24 மணி நேரமும் செயற்கைகோள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சி சேனல்கள் கண்காணிக்கப்பட உள்ளது. உள்ளூர் கேபிள் தொலைக்காட்சிகளில் வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகள் தேர்தல் தொடர்பான விளம்பரங்களை விளம்பரம் செய்யும் முன் ஊடக சான்று மற்றும் கண்காணிப்பு குழுவிற்கு விளம்பரம் குறித்த விபரங்களை இரண்டு நகல்களையும், விளம்பரம் தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டதற்கான செலவினத் தொகைக்கான பட்டியல் போன்றவற்றை உரிய படிவத்துடன் சமர்பிக்க வேண்டும். இதனை கண்காணிப்பு குழு பார்வையிட்டு ஊடக சான்று மற்றும் கண்காணிப்பு குழு தலைவரான மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அதற்கான அனுமதியினை வழங்குவார்கள். எனவே, உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஊடக சான்று மற்றும் கண்காணிப்பு குழு சான்றொப்பம் பெற்ற பின்னரே தேர்தல் தொடர்பான விளம்பரங்களை ஒளிபரப்ப வேண்டும்.

உரிய அனுமதி பெறாமல் தேர்தல் தொடர்பான விளம்பரங்கள் உள்ளூர் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டால் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே, உரிய அனுமதி பெற்று தேர்தல் விளம்பரங்களை ஒளிபரப்புமாறு அனைத்து கேபிள் ஆப்ரேட்டர்கள் கேட்டுகொள்ளப்படுகிறது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், வட்டாட்சியர் (தேர்தல்) திரு.ஜெய்சங்கர், உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.